Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 01 வியாழக்கிழமை (17-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 265

# அரசின் தீர்வு யோசனைகளுக்கு ஐ.தே.கவில் ஒரு பகுதியினர் ஆதரவு

## எம்.பிக்களிடையே முரண்பாடு

கொழும்பு, ஓகஸ்ட். 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதியினர் ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசின் யோசனைகளை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்ற விடயம் தொடர்பாக ஐ.தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முழு நாட்டிற்குமே அழிவை உண்டாக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது அவர்களில் ஒரு சாராரின் கருத்தாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸாநாயக்கவை ஆதரித்த குழுவினரே தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கின்றனர். தீர்வுத் திட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும். அதில் தலையிட வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

### புலிகள் தாக்கலாம் என்ற பீதியால்

## வெலிக்கந்த எல்லைப்புற சிங்களவர் வெளியேற்றம்

கொழும்பு, ஓக. 17

புலிப் போராளிகள் தாக்கக் கூடும் என அஞ்சி பொலன்னறுவை, வெலிக்கந்த பிரதேசத்தில்—எல்லைப்புறக் கிராமங்களில்—வாழ்ந்த பல சிங்களக் குடும்பங்கள்—இருப்பிடங்களைக் கைவிட்டு வெளியேறத் தொடங்கியுள்ளன என ''லங்காதீப'' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கிராமங்களுக்கு அண்மையில் அடர்ந்த காடுகள் அமைந்திருப்பதால் அந்தக் காடுகளை அழிக்குமாறு கிராம மக்கள் பாதுகாப்புப் படையினரையும் அமைச்சர்களையும் கோரிய போதும் அது குறித்து எவரும் அக்கறை எடுக்கவில்லையாம்.

இதற்கிடையில் இராணுவம் வாபஸ் பெற்ற கட்டுமுறிப்புக் குளம், வாகரை தாராவிக் குளம், ஆகிய இடங்களில் புலிகள் முகாம்கள் அமைத்து வருகின்றனராம். [ஒ-10]

## கொழும்பில் கடற்புலிகள்?

கொழும்புக்கும் பாணந்துறைக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் கடற்படைப் படகுகளின் நகர்வைக் கண்காணிப்பதற்காக கடற்புலிகள் கொழும்புக்கு வந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றதாம். இதனால் சந்தேகத்திற்கு இடமான அப்பகுதிக் கடலில் திரியும் படகுகளைக் கைப்பற்ற முப்படையினரும் பொலீஸாரும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக ''திவயின'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

முகத்துவாரப் பகுதியில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் சந்தேகத்திற்கிடமான பல வள்ளங்களைத் தடுத்து நிறுத்தி அவற்றில் இருந்த தமிழ் மீனவர்களை கைது செய்து விசாரணை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### வோல்டர் தேவாரம் விளக்குகின்றார்

## வேலூர் கோட்டை சிறையிலிருந்து ஈழத்தமிழர்கள் தப்பியது எப்படி?

### பல குழுக்களாகப் பிரிந்து இரு இரவுகளில் தப்பினர்

சென்னை, ஓக. 17

வேலூர் கோட்டை சிறையிலிருந்து ஈழத் தமிழ் கைதிகள் தப்பியது எப்படி என்ற விவரத்தை தமிழக பொலிஸ் துறையின் மேலதிக இயக்குநர் நாயகம் வோல்டர் தேவாரம் வெளியிட்டுள்ளார். அவர் கூறிய தகவல்கள் வருமாறு;

கைதிகள் தப்பிச் சென்ற சுரங்கப்பாதை யாரும் வசிக்காத ஒதுக்குப்புறமான ஓர் அறையில் இருந்து வெட்டப்பட்டிருந்தது.

தரையின் கீழே 7 அடி ஆழத்தில் 153 அடி நீளத்துக்கு அது வெட்டப் பட்டிருந்தது.

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கோட்டையின் அகழிவரை சுரங்கப் பாதை இருந்தது.

அகழிக்கு அருகில் வெளியேறும் பாதை காணப்பட்டது.

தப்பி ஓடியவர்கள் அதன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பி ஓடி பிடிபட்டவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்

சென்னை, ஓக. 17

வேலூர் சிறையில் இருந்து தப்பி ஓடியவர்களில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 7 பேர் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அந்த ஏழு பேரையும், சயனைட் அருந்தி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுபவர்களையும் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். [ஒ-3]

### கொழும்பு துறைமுகத்தில் கடும் பாதுகாப்பு:

# டாங்கிகள், கவச வாகனம் கப்பலில் வந்து இறங்கின!

கொழும்பு, ஓக. 17

போர் நடவடிக்கைக்குத் தேவையான டாங்கிகள், கவசவாகனங்கள் மற்றும் ஆயுததளபாடங்கள் கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்துக்கு கப்பலில் கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுததளபாடங்கள் இறக்கப்பட்ட சமயம், கொழும்புத் துறைமுகத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன எனத் தெரிய வந்தது,

துறைமுகத்தில் இறக்கப்பட்ட ஆயுததளபாடங்கள் பெரிய இழுவை [டிரெயிலர்] வாகனங்களில் ஏற்றப்பட்டு, ஆயுதப்படையினரின் பாதுகாப்புடன் இராணுவத் தலைமையகத்துக்கு எடுத்துச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணப் பொருள்களுடன்

## 'லங்கா முடித' கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பாடு?

யாழ்ப்பாணம், ஓக 17

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் ''லங்கா முடித'' கப்பல் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டுள்ளதாககொழும்புத்தகவல் ஒன்று தெரிவித்தது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி காங்கேசன்துறைக்கு யாழ். அரச அதிபருக்கான பொருள்களுடன் வந்த இக்கப்பலில் இருந்து ஒருதொகுதி பொருள்களை படையினர் பலாத்காரமாக இறக்கியதை யடுத்து இக்கப்பலுக்கான பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வாபஸ் பெற்றதும் —

அதை அடுத்து இக்கப்பல் திருகோணமலைக்குச் சென்று பின்னர் கொழும்பு திரும்பியிருந்ததும் தெரிந்ததே.

தற்சமயம் கொழும்பில் இருந்து இக்கப்பல் வடக்கு நோக்கி புறப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல் தெரிவித்தாலும், அக்கப்பல் எங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் விவகாரத்தில் முட்டுக்கட்டை ஏற்பட படை தரப்பே காரணம்

யாழ்ப்பாணம், ஓக. 17

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் வடக்கே உணவுக் கப்பல்களை கொண்டு வருவது சம்பந்தமாக, முத்தரப்பு இணக்கப்பாட்டுக்கு வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சே பெரும் முட்டுக்கட்டை போடுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னரைப்போலவே செஞ்சிலுவைப் பாதுகாப்புடன் உணவுக் கப்பல்களை வடக்கே அனுப்புவதற்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளின் உயர்மட்டத் தலைவர்கள் சம்மதம் தெரிவித்தபோதிலும்—

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இது விடயத்தில் பாதகமான போக்கைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)



## அமரர் வ. சின்னத்தம்பி

ஞாபகார்த்த

## தாவரவியல்

## போட்டிப் பரீட்சை - 95

இன்று நடைபெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த பரிசளிப்பு வைபவம் சில தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதில் பரிசு பெறுவோர் விவரமும், நடைபெறவுள்ள திகதியும் பத்திரிகை விளம்பரம் மூலம் விரைவில் அறிவிக்கப்படும்.

— திருமதி சிவகாமி சின்னத்தம்பி.

விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி.
17-08-1995 (38064)

## ST. PATRICK'S COLLEGE

As already announced, the school will re-open for the Christmas Term at 8.30 a.m on Monday 21.08.95

- RECTOR

(C/2061)

வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வரையுள்ளது)

## பதவி வெற்றிடம்

மேற்படி கொத்தணியின் பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல் தொடர்பில் 09 - 08 - 1995 திகதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கான திருத்தமும், மாற்றமும் வருமாறு:-

வயதெல்லை: 25 - 40 வருடங்கள்
விண்ணப்ப முடிவுதிகதி: 25 - 08 - 1995

தலைவர்
வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.ச கொத்தணி
திக்கம்

[சி/2063]

## முதல் மாத நினைவு தினம்

மலர்வு: 23 — 12 — 1909



உதிர்வு: 16 — 07 — 1995

### திருமதி செயர்மா யோசவ்

[செல்வம் அன்ரி]

[காலம்சென்ற Lab Joseph அவர்களின் அன்பு மனைவி]

சீரோடு கல்வி சிறப்புடன் ஊட்டி
பார்புகழ வாழ பரிந்தெமை வளர்த்து
நேரிய பாதையில் நெறி பல காட்டிய - எம்
ஆருயிர் அன்னைக்கு ஆத்ம அஞ்சலி

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்!
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

797, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (38069)

# குடாநாட்டை படையினர் தாக்க முன்

# கொழும்பை புலிகள் தாக்கலாம்!

### பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சம்

கொழும்பு, ஓக. 17

யாழ். குடாநாட்டின் மீது படையினர் பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுதலைப்புலிகள் கொழும்பில் தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கருதுவதாக 'த ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் புலிகளின் இலக்கு முக்கிய நபர் ஒருவராக இருக்கலாம் அல்லது வேறு முக்கிய பகுதிகளாக இருக்கலாம் என்றும் —

வட மாகாணத்தில் உள்ள பாரிய ராணுவ முகாம் ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் சமீபத்தில் தெரிவித்த கருத்து, மேலும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்பதை சுட்டிக் காட்டுவதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வடக்கு - கிழக்கில் உள்ள படை முகாம்கள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தீர்வு யோசனைகள் குறித்து அரசு சிந்திக்க முன்னர் விடுதலைப் புலிகளை ராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டும் என்று பெரும்பாலான அரசாங்க எம். பிக்கள் கருதுவதாகவும்—

அரசாங்கத்தின் உத்தேச இடைக்கால நிர்வாக சபையும் பயனற்றது என்றும்—

இதன் உறுப்பினர்கள் தமது பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலை இருக்கும் போது இதன் நோக்கம் அர்த்தமற்றதாகி விடுகிறது என்றும்— தலைவர்கள் தெரிவித்திருப்பதாகவும் 'த ஐலண்ட்' மேலும் தெரிவிக்கிறது. [இ]

### இலவச மூக்கு கண்ணாடி

யாழ்ப்பாணம், ஓக 17

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக் நிறுவனத்தினூடாக இலவச மூக்குக் கண்ணாடி பெற விண்ணப்பித்தோர், நாளை வெள்ளிக்கிழமை அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### மருந்து எடுத்து வர அனுமதி

கொழும்பு, ஓக. 17

யாழ். மாவட்டத்திலுள்ள அரச ஆஸ்பத்திரிகளுக்கான மூன்றாம் காலாண்டுக்கான— மருந்து வகைகளை எடுத்து வருவதற்கு முன்னர் அனுமதி வழங்க பின்னடித்த பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புக் குழு, தற்போது அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது.

இம்மருந்துகளை 'ஹபரண' கப்பல் மூலம் வடக்கே எடுத்து வர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. (உ-4)

### மட்டக்களப்பில் விமான குண்டு வீச்சு

கொழும்பு, ஓக. 17

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிக்கு மேற்கே மகிழவெட்டுவான், தொடுவில் சோலை பகுதிகளில் கடந்த ஞாயிறு பிற்பகல் விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளன

இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த நெற்போர்கள் நாசமாகின. (ஐ)

## கொழும்பு குண்டு வெடிப்பு சம்பவம்:

# முக்கிய சந்தேக நபருக்கு கிராமசேவகர் உடந்தை?

கொழும்பு மேல்மாகாண சபைக் கட்டடத்தில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபருக்கு நாரகன்பிட்டி பகுதி கிராமசேவகர் ஒருவர் உடந்தையாக இருந்தார் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சின்னையா சிவநாதன் [குமார்] என்ற சந்தேகநபர் நாரஹேன்பிட்டி பகுதியில் இரண்டு வருடகாலமாக வசித்துவருபவர் என சம்பந்தப்பட்ட கிராம சேவகர் அத்தாட்சிப்பத்திரம் வழங்கியிருந்தமை தெரியவந்துள்ளதாம்.

ஆனால்சந்தேகநபர் அப்பகுதியில் இரண்டு மாதங்களாகவே தங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து அந்த கிராமசேவகர் தலைமறைவாகி உள்ளார். [எ-10]

# 'மாமா' என்பவரை தேடி பொலீஸார் வேட்டை

கொழும்பு, ஓக. 17

கொழும்பு சுதந்திர சதுக்கப் பகுதியில் மேல் மாகாண முதலமைச்சரின் அலுவலகம் குண்டு வெடிப்பினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸார் தற்போது "மாமா" என அழைக்கப்படும் ஒருவரைத் தேடி வருகிறார்கள் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

தற்கொலைக் குண்டுதாரியான குமார் என்று அழைக்கப்படும் சின்னையா சிவபாலனையும் மற்றும் நால்வரையும் "மாமா" என்று அழைக்கப்படும் இந்த நபரே யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு அழைத்து வந்ததாகவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

வெள்ளவத்தையில் உள்ள சாப்பாட்டுக்கடை ஒன்றில் இவர் தங்கி இருந்ததாகவும் பொலீஸார் அங்கு சோதனையிட வருவதற்கு ஒருசில மணி நேரத்துக்கு முன்னரே அவர் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

நாரஹேன்பிட்டியாவில் ஆனந்தன் என்பவரை தாம் கைது செய்திருப்பதாகவும் இவர் இந்த "மாமா" என்பவருடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் பொலீஸார் மேலும் தெரிவிக்கின்றனர். [இ]

### புலிகளின் குரல் வானொலியில்

**17 – 08 – 1995**
**வியாழன் இரவு**

- ★ 8-03 — சொல்லுங்கள் பார்க்கலாம்.
- ★ 8-10 — நோய்தீர்க்கும் மூலிகைகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" குறு நாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எங்கள் தேசம்

**18 – 08 – 1995**
**வெள்ளி காலை**

- ★ 7-03 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

**வியாழன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி-பதில்- விளையாட்டுத் தொடர் பாளவை.

## முக்கிய அறிவித்தல்

இன்று முதல் "MEDIQUICK" (மெடிகுயிக்) ஆய்வு கூடம் வழமைபோல் இயங்கும் என்பதையும், சுன்னாக ஆய்வு கூடம் தற்காலிகமாக 518, ஆஸ்பத்திரி வீதிக்கு மாற்றப்பட்டுள்ளதையும். உரிமையாளர் திரு. அ. சுந்தரலிங்கம் அனைவருக்கும் அறியத் தருகின்றார்.

இங்ஙனம்
அ. சுந்தரலிங்கம்
(M. L. T.)

(8639)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் (உபதபால் கந்தோர் ஒழுங்கை) இரண்டு பரப்புக் காணிக்குள் மூன்று அறைகளும் சகல வசதியும் கொண்ட கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்;

ந. ஆலாலசுந்தரம்,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. (38060)

★சிங்களக் குண்டர்கள் அட்டகாசம்

# தமிழர்களின் 75 வீடுகள் அம்பாறையில் தீக்கிரை!

## இருவர் பலி! 17 பேரைக் காணவில்லை!!

கொழும்பு, ஓக. 17
அம்பாறை மாவட்டத்தின் நாலாம் கொளனி கிராமத்தில் கடந்த ஞாயிறன்று சிங்களக் குண்டர்கள் நடத்திய அட்டகாசத்தில் தமிழர்களின் 75 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இருவர் கட்டுக் கொல்லப்பட்டனர், 17 பேர் காணாமற் போயுள்ளனர்.

நாலாம் கொலனியைச் சேர்ந்த கந்தக்குட்டி தங்கேஸ்வரன் (வயது 26), முருகப்பர் தர்மரெத்தினம் (வயது 18) இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

அப் பகுதியில் நடந்த சம்பவம் ஒன்றை அடுத்து கிராமத்துக்குள் புகுந்த வெறி கொண்ட கும்பல் கண்டபடி வீடுகளுக்குத் தீ வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை செய்து வைத்திருந்த நெல் மூடைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

அங்கிருந்த மூன்று கடைகள் குண்டு வீசித் தகர்க்கப்பட்டன.

தாக்குதலை அடுத்து அக் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் காட்டுப் பகுதிக்குள் தப்பியோடினர். பலர் கல்முனைப் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர்.

ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்களே அங்கு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரியவருகிறது. (ஐ)

## ராணுவ அதிகாரிகளிடையே பிளவை ஏற்படுத்த முயற்சி

கொழும்பு, ஓக. 17
இராணுவ உயர் அதிகாரிகளிடையே நிலவும் கருத்து முரண்பாடுகளைத் தூண்டி அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை அதில் தலையிட வைக்கும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட்டு, சமாதானம் ஏற்படுவதை விரும்பாத இராணுவ அதிகாரிகள் சிலர் இந்த இயக்கத்திற்கு பூரண ஆதரவு கொடுத்துச் செயல்படுவதாகவும்—

இதற்கு சில பொதுசனத் தொடர்பு நிறுவனங்களும் உதவி வருவதாகவும்— அப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## தூத்துக்குடிப் படகுகளுக்கு விதித்த தடை தளர்வு

சென்னை, ஓக. 17
சென்னை தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இயந்திரப் படகுகள் கொழும்பு துறைமுகத்துக்கு பொருள்களை ஏற்றி வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை இலங்கை அரசு தளர்த்தியுள்ளது.

உருக்கினால் செய்யப்பட்ட அடித்தளங்களைக் கொண்ட படகுகள் பொருள்களை ஏற்றி வர அனுமதிப்பது என்று இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

ஆனால் உருக்கினால் அடித்தளம் செய்யப்படாத படகுகளில் பொருள்களை ஏற்றி வருவது தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ளது. (எ-3)

## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 17
நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பதினேழாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:—

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் — மாலை 6 மணி முதல் 7 மணி வரை திரு. ரி. கருணாகரன் - பாட்டு.

★ 7 மணி முதல் 8-30 மணி வரை — ஹப்ஸானந்தி சேதுபதி பாட்டு

★ நல்லை ஆதீன கலா மண்டபத்தில் — திருமுறை வழிபாடும், பயிற்சி நெறி வகுப்புக்களும் — காலை 8-30 மணி தொடக்கம் 12-00 மணி வரை—

★ பண்டிதர் மு. கந்தையா "வாழ்வியல் முப்பொருள் விளக்கம்"

சிவ ஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் "அபரக் கிரியை விளக்கங்கள்"

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்— பி. ப. 3-00 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை— "திருமந்திரம்"

★ மேற்கு வீதியில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்—

மாலை 5-30 மணிக்கு— பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் 'விஷ்ணு பாகவதம்' தொடர் இசைப் பேருரையில் 'சகுந்தலை'.

தீர்வு யோசனை விடயங்கள் குறித்து

## தம்முடன் விவாதம் நடத்த வருமாறு பீரிஸுக்கு ஹரிச்சந்திரா அழைப்பு

கொழும்பு, ஓக. 17
அரசு முன்வைத்துள்ள தீர்வுயோசனைகளில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக தம்முடன் விவாதம் நடத்த வருமாறு நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸுக்கு சிங்கள பூமி புத்திரர் கட்சியின் தலைவர் கலாநிதி ஹரிச்சந்திர விஜேதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அரசின் திட்டத்தின்படி இந்த நாடு மாகாணங்களாகத் துண்டாடப்படுமாயின் அது சிங்கள இனத்தின் அழிவுக்கே வழிகோலும் என்று ஹரிச்சந்திரா தெரிவித்துள்ளார்.

தீர்வுத் திட்டத்தில் அடங்கியுள்ள இணங்காண முடியாத விடயங்கள், ஒரு போதும் பதில் காணமுடியாத விடயங்கள், மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் என்பன குறித்து மக்களுக்கு தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றும்—

எனவே இவை குறித்து தம்முடன் விவாதம் நடத்த வருமாறும் ஹரிச்சந்திர, அமைச்சர் பீரிஸுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் கோரியுள்ளார். [ஐ-10]

## தீர்வுத் திட்டம், ஆட்சி முறை ஒழிப்பு: இரண்டையும் ஒன்றாக்காதீர்கள்!

எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஓக 17
அதிகாரப் பரவலாக்கல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்துச் செய்தல் ஆகிய இரண்டு விடயங்களையும் ஒன்றாக இணைப்பதற்கு எதிரணி அரசியல் கட்சிகளும், சில அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இவை இரண்டையும் தனித்தனி விடயங்களாகக் கொண்டு தனித்தனியாக சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்த வேண்டும் என்றும் அவை கோரியுள்ளன.

தனித்தனியான சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்த முடியாவிட்டால் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்புச் சட்டத்தின் ஷரத்துகளைத் திருத்தி ஒரே வாக்களிப்புப் பத்திரத்தில் தனித்தனியான கேள்விகள் பலவற்றை வெளியிட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் பொதுச் செயலாளர் ஆரியபுலகொட கூறியுள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் இரண்டு விஷயங்களையும் ஒன்றாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். (ஐ-க)

## திருமலையில் தலைகீழாக பறந்த தேசியக் கொடி!

பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஓக. 17
கடந்த சனியன்று திருமலை புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்ற "மகாபொல" புலமைப் பரிசில் வழங்கும் வைபத்தில் தேசியக் கொடி தலைகீழாகப் பறக்க விடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விசேட பொலீஸ் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்ட அந்த வைபவத்தில் தேசியக் கொடி ஏற்றப்பட்டவேளை அது தலைகீழாக கட்டப்பட்டிருந்தது தெரியவந்ததாம்.

கொடி வேண்டும் என்றே தலைகீழாகக் கட்டப்பட்டதா அல்லது தவறுதலாகக் கட்டப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் பொலீஸார் ஆர்வம் காட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளுக்குமுன் திருமலையில் நடந்த சுதந்திர தின விழாவில் தேசியக் கொடி ஏற்றப்பட்ட சில நிமிடங்களில் அது எரிந்து சாம்பரான சம்பவம் இடம்பெற்றது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [ஐ]

கைதிகள் தப்பியதை அடுத்து

## தமிழ் நாடு, கர்நாடகாவில் படையினர் உஷார் நிலை!

வாகனங்களை மறித்துச் சோதனை

சென்னை, ஓக. 17
வேலூர் சிறையிலிருந்து விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் தப்பி ஓடியதை அடுத்து தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் புதுச்சேரியில் பாதுகாப்புப் படையினர் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தப்பி ஓடிய போராளிகளைத் தேடிப்பிடிக்கும்பணி தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்நாடக மாநிலப் பொலீஸார் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தப்பி ஓடிய போராளிகள் புதுச்சேரிக்குள் புகுந்துவிடாமல் தடுப்பதற்காக புதுச்சேரிக்குள் வரும் எல்லா வாகனங்களையும் படையினர் சோதனையிட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

போராளிகள் தப்பியதில் சிறை அதிகாரிகளுக்கும் போராளிகளுக்கும் தொடர்பு இருந்ததா என்பதைக் கண்டறியுமாறு மத்திய உள்துறைச் செயலர் திரு. பத்மநாபையா தமிழ்நாடு அரசைக் கேட்டுள்ளார்.

## பூந்தமல்லி சிறைக்கு பலத்த பாதுகாப்பு!

புதுடில்லி, ஓக. 17
சேலம் சிறைச்சாலையில் இருந்து விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 43 ஈழத்தமிழர்கள் தப்பியோடி விட்டதை அடுத்து ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ள பூந்தமல்லி புறநகர் சிறையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதேவேளை—

—கைதிகள் தப்பியோடியது தொடர்பாக நீதி விசாரணை நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கென நீதிபதி ஒருவரை தந்து உதவுமாறு சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை தமிழக அரசு கேட்டிருக்கிறது. [ஐ]

### நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

#### கந்தாவுன் கருணை எங்கே?

குண்டடித்தும் படையினர்கள் கும்மாளம் போடுகிறார்
துண்டு பட்டு உடல்சிதறித் துடித்து மக்கள்
மரிக்கின்றார்
கண்டோர் செய்யுமிந்தக் காட்டுமிராண்டித்
தனங்கண்டும்
கண்மூடி யிருப்பாயோ கந்தாவுன் கருணையெங்கே?

— உரும்பிராய் செ. ஐயாத்துரை.

#### மனமிரங்கி அருள் செய்வாயே!

வேலெடுத்து விளையாடும் வீரா! அந்த
விண்ணவர்கள் துயர் தீர்த்த வெற்றி வேலா!
கோலமயில் மீதிவர்ந்து கருணை காட்டும்
குறுநகை தவழ் வேலவனே! உமையாள் பாலா!
பால் வடியும் உன் முகத்தில் சிரிப்புத் தோன்றிற்
பனிவரையில் கோடியெல்லாம் நிலவு காட்டும்
காவலெல்லாம் வாட்டியது போதும் நல்லைக்
கதிர்வேலா! மனமிரங்கி அருள் செய்வாயே!

— பொன். ஐயாத்துரை சிவசாமி.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### FOR SALE

Kirloskar Engine Water Cooled 10 H. P. Type A V2. 2 Cylinder. Contact; Samuel Sons and Co. Ltd., No 206, Hospital Road, Jaffna. [38047]

### விற்பனையாகின்றது

செம்பியன் ஆழியானின் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் அனைத்தையும் மலிவு விலையில் நல்லூர் உற்சவ தினங்களில். நல்லூர் ஆலய வீதியிலுள்ள பூபால சிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (37994)

### மலிவு விற்பனை

இன்று மாலை இனிக்கோழிகள், சில்க்கி, ஹங்கேரியன் பிறாமா, மணித்தாரா, வெள்ளடியன், வெலுவைவாத்து என்பன விற்பனைக்கு உண்டு N. ரமேஷ், C/o K. நித்தியானந்தன், (வட்டுக்கோட்டை வீதி), சித்தன் கேணி (சுப்பர்சோனிக் அடுத்த இடம்). (கடைசி விற்பனை) [38051]

### தவறிவிட்டது

வே. தவமணிதேவி, எட்வட் கிளையின் ஆகியோரின் நிவாரண முத்திரைகள் கே. கே. எஸ். வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 212/1, கோவில் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [38053]

### கல்வியும் உளவியல்

கல்வியும் உளவியலும் பகுதி II ஆக்கம்:- கலாநிதி ச. முத்துலிங்கம், (முன்னாள் பேராசிரியர் கல்வி உளவியல் துறை, கலைப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1997)

### இலகு திருமண சேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த அச்சுவினி, உதயச் செவ்வாய், 63 பாவம், 38 வயது, அழகிய மணப்பெண்ணுக்கு உயர்பதவி வகிக்கும் மணமகனைத் தேடுகிறார்கள். மணமக்களைத் தேர்ந்தெடுக்க நாடுங்கள்! விமலா, நாச்சிமார் கோவிலடி. (38029)

### தேவை

பால் எடுத்துச் செல்லக்கூடிய அலுமினிய / எவர்சில்வர் கொள்கலன்கள் தேவை. கொள்கலன்கள் வைத்திருப்போர் கீழ்கண்ட முகவரிக்கு உடன் தொடர்புகொள்ளவும். நியாயமான விலை பேசித் தீர்மானிக்கப்படும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-2060]

## நல்லூரில் சுகாதார கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரக் கல்விப் பிரிவும், வடமாகாண புற்றுநோய் எய்ட்ஸ் தடுப்புச் சங்கமும் இணைந்து நல்லூர் இந்து விடுதியில் சுகாதாரக் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகின்றன.

இலவசமாக நடத்தப்படும் இக் கண்காட்சியை, இம் மாதம் 28 ஆம் திகதி வரை தினமும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். [எ]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

**அப்புத்துரை விநாயகமூர்த்தி**

மாவிட்டபுரம் வடக்கைச் சேர்ந்த திரு. அப்புத்துரை விநாயகமூர்த்தி அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று [17-08-95] வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்து, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, மகன்.

5ஆம், ஒழுங்கை,
மருதனார்மடம்,
மானிப்பாய் வீதி,
உடுவில். [38056]

## தென் இந்திய திருச்சபையின் தொழிற் பயிற்சி வகுப்புக்கள்

1995ஆம் ஆண்டு தொழிற் பயிற்சி வகுப்புகள் புரட்டாதி நான்காம் திகதி ஆரம்பமாகின்றன

- ✶ தையல்
- ✶ தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து
- ✶ ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து
- ✶ விசேட ஆங்கிலம்

ஆகிய பாடங்களுக்கான விண்ணப்பங்களை

தென் இந்திய திருச்சபை யாழ். பேராயம்
நகர் பணி
41, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
என்னும் விலாசத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளுங்கள்

விண்ணப்பங்கள் முடிவு திகதி 28 - 08 - 1995

முகாமையாளர்,
தொழிற்பயிற்சி நிலையம்,
யாழ்ப்பாணம.

(38057)

உ
சிவமயம்

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் ஆவணித் திங்கள் 4ஆம் நாள் [20-08 95] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-12மணி தொடக்கம் 2-46 மணிவரையிலான தனு லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**Dr. கருணாகரன்**<br>அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>**Dr. குமுதினி**<br>அவர்களுக்கும் |
|---|---|

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளுடன் திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. திருமணம் Winnipeg Canadaவில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

திரு. இ. சிவசுப்பிரமணியம் (நில அளவையாளர்)
திருமதி சிவசுப்பிரமணியம்
"அகிலேசவாசா"
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

Mrs K. Seevaratnam,
641, Simcoe Street
Winnipeg, Manitoba,
R3E 2C2, Canada.

(38046)

## பிறந்த நாள் வாழ்த்து

சாவகச்சேரி நுணாவில் கிழக்கைச் சேர்ந்த

**பொன்னம்பலம் முகுந்தன்**

தனது 18 ஆவது பிறந்த தினத்தை இன்று 17 - 08 - 1995 இல் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

— சாவகச்சேரி நண்பர்கள்.

[சி-2059]

## அடையாள அட்டை தவறிவிட்டது

வ. சுனிதா என்பவரின் அடையாள அட்டை, C.I.M.A. ஆவணங்கள் ஆகியன அடங்கிய கைப்பை கொடிகாமத்துக்கும் — கைதடிக்கும் இடையில் 15 - 08 - 95 அதிகாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 89, கலைமகள் வீதி, அரியாலை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (38059)

## அரச, கூட்டுத்தாபன தட்டெழுத்தாளர் ஆட்சேர்ப்புப் பரீட்சை-1994

இம்மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் செயலாளரை சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சந்திக்கவும்.

— செயலாளர்.

வதிரி,
கரவெட்டி. (38058)

அழகிய வேலைப்பாடுடன் கூடிய 40 அடி நீள

டணப்பந்தல், கதிரைகளுக்கும்
மற்றும் வர்ண புகைப்படம் பிடித்திடவும்

## ராஜன் வீடியோ

மூவிஸ் சென்ரர்

தொடர்புக்கு:

**ராஜன் சைக்கிள் வேர்க்ஸ்**
பருத்தித்துறை.

(சி-2058)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

(17 — 08 — 1995)



திருமதி

**குணேஸ்வரி இராசரத்தினம்**

மறைவு: 18 — 07 — 1995

மண்ணிலே எங்களுக்கு மாதா நீ
கண்ணிலே மணியைப் போல் காத்தெமை
புரந்த தாயே கருணைச் செல்வி
எம்முளே உயிரோட்டமாய் உறைந்து
எம்மைத் தான் நீ காத்தாயே
நெஞ்சம் கனன்று சுக்குநூறாகி
தஞ்சமேதுமில்லா அநாதை போல்
பஞ்சையாய்த் திரிகிறோமே.

— குடும்பத்தினர்.

253/3, ஆஸ்பத்திரி வீதி,
கண்டிக்குளி
யாழ்ப்பாணம். (38061)

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## சந்திரிகாவின் கனவு

ஸ்ரீலங்காவில் சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து நேற்றுடன் ஓர் ஆண்டு நிறைவடைந்து விட்டது. மிகவும் மெலிந்த நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் ஒரு வருட காலத்தை அதிர்ஷ்டவசமாகப் பூர்த்தி செய்துவிட்டது.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை (பாண் உற்பத்திக்கு மானியம் வழங்கி அதன் விலையை குறைத்ததைத் தவிர) அரசினால் நிறைவேற்ற இயலவில்லை.

பொருண்மியப் புலத்தில், முந்திய அரசாங்கத்தின் கொள்கைகளையும், செயற்பாடுகளையுமே பின்பற்றுவதால், புதிய அரசு பதவியேற்ற பின்னர் எவ்வித வளர்ச்சிப் போக்கும் தென்படவில்லை.

வெளிநாட்டு முதலீடுகள் நலிந்து, வேலை இல்லாத் திண்டாட்டம் பல்கிப் பெருகியுள்ளது. கிராமப் பகுதிகளில் வறுமை மலிந்துள்ளது. அரசியல்வாதிகளின் வசதிகளும், வாய்ப்புகளுமே விருத்தி கண்டுள்ளன.

அரசியல் புலத்திலோ நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. போர் அர்த்தமற்றது அதற்குச் செலவாகும் பணத்தை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வேன் என்று கூறியவர், சந்திரிகா.

சமாதான வழியில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு போரை முடிவுக்குக் கொண்டு வரப்போவதாகவும் அவர் உறுதியளித்திருந்தார். ஆனால் இப்போது போரின் ஊடாக சமாதானத்தை கொண்டு வரப் போவதாக உளறுகிறார்!

தமிழர்களின் உரிமைகளை வழங்கி அவர்களின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரப் போவதாகக் கூறியவர் அவர்களை அழிப்பதன் மூலம் பிரச்சினையை இல்லாமற் செய்துவிடலாம் என்று எண்ணிச் செயற்படுகிறார்.

ஆகப்பிந்தி, இனப்பிரச்சினைக்கென ஒரு தீர்வு யோசனையை முன்வைத்து, உலகநாடுகள் முன் தன்னை ஒரு சமாதான விரும்பியாகவும், நியாயம் உள்ளவராகவும் காட்டிக் கொண்டு தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தொடர்ந்து அவர்களை அழிக்க முற்பட்டிருக்கிறார்!

தமது தீர்வு யோசனையைச் சிங்களவர்கள் எதிர்ப்பார்கள். போரைத் தொடரச் சொல்வார்கள். அந்த வேகத்தில், உணர்ச்சியில் நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்வதை மறந்து விடுவார்கள். போரை இழுத்தடித்தால், நாடாளுமன்றத்தைக் கலைக்க நேர்ந்தாலும், தாம் ஆட்சிக் கதிரையில் தொடர்ந்து வீற்றிருக்கலாம் என்ற பெருந்திட்டத்தோடுமிருந்த ""மதிநுட்பத்துடன்"" செயற்படுகிறார் சந்திரிகா.

ஆனால் அவரது திட்டம்—கனவு— நனவாகுவது பெரும் சந்தேகத்துக்குரியதே. சிங்களவர்களே இவரது ஆட்சியில் வெறுப்படைந்து விட்டார்கள் அதன்பிரதிபலிப்பு விரைவில் அரசியல் பூகம்பமாக வெடிக்கும்!!

தமது கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு

# வாகனங்கள் செல்லவும் கிழக்கில் படையினர் தடை

கொழும்பு, ஓக. 17

கிழக்கில், தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு, வாகனங்கள் செல்வதை இராணுவத்தினர் தடை செய்துள்ளனர்.

இப் பகுதிகளுக்கு உணவு மற்றும், அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வது ஏற்கெனவே தடை செய்யப்பட்டுள்ளது.

தற்போது செங்கலடி பதுளை வீதியூடாக தனியாரது வாகனங்கள் பயணம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உன்னிச்சை, கரடியனாறு உறுகாமம், இலுப்படிச்சேனை மகிழவெட்டுவான், பன்குடாவெளி போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் வாகனங்கள் செங்கலடிப் பாலத்தடியில் உள்ள இராணுவ தடை முகாமில் வைத்து திருப்பி அனுப்பப்படுகின்றன.

இப் பகுதிகளுக்கு தினமும் ஓரேயொரு பஸ்தான் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் திருகோணமலை ஈச்சிலம்பத்தையில் இருந்த இராணுவ முகாம் மூடப்பட்டதை அடுத்து. அப் பகுதிக்கும் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

## றோட்டரக்ட் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். றோட்டரக்ட் கழகம் நடத்தும் சுகாதாரக் கருத்தரங்கு இன்றுவியாழன் மாலை 6 மணிக்கு குரு நகர் சென். றோக் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் ''இடம் பெயர்வுகளும் நாம் கவனிக்க வேண்டிய சுகாதார நலங்களும்'' என்ற பொருள் பற்றி யாழ். சுகாதாரப் பகுதி அதிகாரி திரு. சிவலிங்கம் கருத்துரை வழங்குவார். (ந)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 17

பொலிகண்டி கந்தவன ஸ்ரீ சாரதா சேவாச்சிரம மடத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பஜனையும் சொற்பொழிவும் இடம்பெறும் ''எந்தாயும் எந்தை முருகனும்'' என்ற தலைப்பில் சுவாமி சித்ருபானந்தா உரையாற்றுவார். (ஐ)

## லங்கா சிமெந்து ஊழியருக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 17

லங்கா சிமெந்து கம்பனி ஊழியர்களின் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என செயற்பாட்டு முகாமையாளர் திரு. சி. வேலாயுதம் அறிவித்திருக்கிறார். (ஓ)

## ஆதீன பீடாரோகண விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 30 ஆவது ஆண்டு பீடாரோகண விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

பூசை, வழிபாடுகளை அடுத்து நண்பகல் 12-30 மணிக்கு மகேஸ்வரபூசையும் இடம் பெறும். (அ-30)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக 17

மலேரியாத் தடுப்பு இயக்க வெளிக்கள உதவியாளர்களுக்கான ஆலோசனைக் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்படுள்ளது. (ஒ-4)

## கூட்டணி எம். பிக்களுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 17

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மேலும் பலமாக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தின் தீர்வு யோசனையை கூட்டணி ஆதரித்ததாகவும் —

இவ்வாறு அவர்கள் தீர்வு யோசனையை ஆதரிப்பது தமிழர்களைக் காட்டிக் கொடுப்பதாகும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டித்ததாகவும்—

அதனைத் தொடர்ந்து, அவர்களுக்கு வழங்கும் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டதாகவும் — கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. [அ]

## பெறுபேறுகளை பார்க்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 17

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களின் பெறுபேற்று புள்ளி விவரங்கள் அடங்கிய பட்டியல் கல்விவலயம் ஒன்றின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளின் புள்ளி விவரங்கள் கல்வியமைச்சால் அவர்களுக்கு ஏற்கனவே தபாலில் அனுப்பப்பட்ட போதும் அவை இன்னும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-4)

# சிகரெட், மதுபானம் பாடசாலையில் தடை!

## கல்வி அமைச்சு சுற்று நிருபம்

கொழும்பு, ஓக. 17

பாடசாலை வளவுக்குள் சிகரெட் விற்பனை செய்வதையும், பாடசாலையில் மதுபானம் பயன்படுத்துவதையும் உடனடியாகத் தடை செய்யும் சுற்று நிருபம் ஒன்று நேற்று முன்தினம் கல்வி அமைச்சினால் நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை கிறிக்கெட் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற வைபவங்களின் போது சில பாடசாலைகளில் மாணவர்கள் புகைத்தலையும் மதுபானத்தையும் பழக்கமாக்கிக் கொண்டுள்ளனர் பாடசாலை நேரங்களில் ஆசிரியர்கள் புகைப்பது சாதாரண பழக்கமாக இருக்கிறது.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் படி—

பாடசாலை நேரங்களில் புகைத்தலும், மதுபானமும் பூரணமாகத் தடை செய்யப்பட்டுளளது என அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். மேலும் பாடசாலை வைபவங்களின் போதும் மதுபானம் தடை செய்யப்பட்டுள்ளது. [ஓ-6]

## தேரர்களுடன் ரணில் சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த ஞாயிறன்று மாலை கண்டி பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்து அரசின் தீர்வு யோசனைகள் குறித்து கலந்துரையாடினார்.

முதலில் அஸ்கிரிய பீடாதிபதியையும், பின்னர் மல்வத்தை பீடாதிபதியையும் அவர் சந்தித்து உரையாடினார். (ஐ)

## வேலூர் கோட்டை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வழியாக வெளியே வந்து, மதில் சுவர் பாறைக்கற்களை அகற்றி அக்கற்களையும் தமது அறைக்குள் பாதுகாப்பாக வைத்து விட்டு மதில் ஏறித் தப்பி ஓடினார்கள்.

அவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து 13 ஆம் திகதி இரவு ஒரு குழுவாகவும் 14ஆம் திகதி இரவு இன்னுமொரு குழுவாகவும் தப்பிச் சென்றார்கள்.

ஒவ்வொரு குழுவிலும் 6 பேர் இருந்தார்கள் மற்றையவர்கள் திங்கட்கிழமை நள்ளிரவுக்கு பிறகு தப்பி ஓடினர்.

அகழியில் இருந்த 10 அடி நீரில் நீந்தி அவர்கள் வெளியேறினார்கள்.

பாதுகாப்புக் கருதி அவர்களை சிறையின் மற்றைய பகுதிகளில் இருந்து பிரித்து தனியே உள்ள சிறைக்கூடத்தில் வைத்திருந்தனர்.

ஆதனால் தம்செயற்பாட்டை சிறைக்காவலர்கள் அறியமுடியாதவாறு சுரங்கம் மூலம் அவர்கள் தப்பமுடிந்தது — இவ்வாறு தேவாரம் தெரிவித்தார்.

''சுரங்கத்தில் வெட்டி எடுத்த மண்ணை சிறைக்கூடத்தில் காலியாக விருந்த அறையில் அவர்கள் போட்டனர். மீதமிருந்த மண்ணை சிறைக்கூடத்தின் நடுவே இருந்த திறந்த வெளி முற்றத்தில் பரப்பி வைத்தார்கள்'' — என்று மற்றுமொரு அதிகாரி தெரிவித்தார்.

அவர்களைப் பார்க்க வந்தவர்கள் கொடுத்த பணமும் சயனைட்டும் அவர்களிடம் இருந்தன என்றும் கூறப்பட்டன.

பெண்கள் உட்பட 77 பேர் அச்சிறைப் பகுதியில் தடுத்து வைக்கப்படிருந்தனர்.

இதற்கிடையில்—

தப்பியோடிய ஈழத்தமிழர்களின் படங்களை தமிழக அரசு வெளியிட்டிருப்பதாக சென்னை செய்திகள் தெரிவித்தன

தப்பியோர் பற்றிய தகவல்களைத் தருமாறு தமிழக அரசு தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுள்ளது. [உ-3-4]

## அரசின் தீர்வு யோசனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொரு தரப்பினர் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பதுடன் அது பற்றி பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர்.

இதற்கிடையில், தென் பகுதியைச் சேர்ந்த ஐ. தே. கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தீர்வுத் திட்டத்திற்கு ஐ. தே. கவின் பத்து எம். பிமாரின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தரமுடியும் என அரசின் முக்கிய பிரமுகர் ஒருவக்கு தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

தீர்வுத் திட்டம் குறித்து ஐ. தே. க. வெளிப்படையாக கருத்து எதையும் வெளியிடாத போதும் இது விடயத்தில் கட்சிக்குள் கயிறு இழுத்தல் போட்டி நடைபெறுவதாகத் தெரியவருகின்றது.

தீர்வுத் திட்டத்துக்கு ஐ.தே.கவில் ஒரு சிறு பகுதி எம். பிமாரின் ஒத்துழைப்பு இருந்தால் அதனை அரசு நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றி விட வாய்ப்பு இருப்பதாக கொழும்பில் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பல்வேறு கட்சிகளின் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 105 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

இந்த 105 உறுப்பினர்களில் 89 பேர் ஸ்ரீ. ல. சு. கவைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய 16 பேரும் கூட்டணியின் பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுடன் ஏழு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களையும் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவரையும் சேர்த்து பொ. ஐ. மு. ஆட்சி அமைத்துள்ளது என்பது தெரிந்ததே.

இவர்களைத் தவிர இ.தொ.காவின் 9 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பியின் 9 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்து உறுப்பினர்களும் புளொட்டின் அரசியல் பிரிவைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும், அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு நாடாளுமன்றில் ஆதரவு வழங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொ. ஐ. மு. அரசு தன்னுடைய அணியில் உள்ள [முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி உட்பட] 113 எம். பிக்களினதும் ஏனைய 26 தமிழ் எம். பிக்களினதும் ஆதரவை சிதறாமல் பெற்றுக் கொள்ளுமானால்—

மொத்தம் 139 எம். பிக்களின் ஆதரவு அதற்குக் கிட்டும்.

தீர்வுத் திட்ட யோசனைகளை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவதற்கு (225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையான 150 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற) பொ.ஐ.மு. அரசுக்கு இன்னும் பதினொரு எம்.பிக்களின் ஒத்துழைப்புத் தேவை.

எஞ்சியுள்ள 85 ஐ.தே.க. உறுப்பினர்கள் மற்றும் ஒரேயொரு ஜே.வி.பி. உறுப்பினர் ஆகியோரில் இருந்தே பதினொரு பேரின் ஆதரவைப் பெற வேண்டிய நிலை அரசுக்கு உள்ளது.

இந்நிலையில் —

அரசின் தீர்வு யோசனைகளை ஆதரிக்க ஐ.தே.கவின் பத்து எம்.பிக்கள் முன்வந்திருப்பதாக வெளியாகியுள்ள செய்தி அரசுத் தரப்புக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3-10]

# மரண அறிவித்தல்கள்

## A. J. அல்போன்சஸ்

இளவாலை

[இளைப்பாறிய அதிபர் மாரீசன்கூடல் றோ. க. பாடசாலை]

இளவாலை உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் A. J. அல்போன்சஸ் அவர்கள் 12-8-95 இல் 79/17, கல்யாணி மாவத்தை, வத்தளையில் இறைபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை அருளப்பு [சித்த ஆயுர்வேத வைத்தியர்], விக்ரோறியா ஆகியோரின் அன்பு மகனும், மேரி அந்தோனியா திரேசா [றோஸ்], அவர்களின் அருமைக் கணவரும், சகாயநாதன் [அவுஸ்திரேலியா], திருமதி மரியதிராஜினி சொர்ணராஜா, யேசுதாஸ் மனோகரன் (பிரான்ஸ்), விக்ரர் அன்ரனிதாஸ் [வத்தளை], போல்ரவீந்திரன் (கனடா), எட்வின்யூட் [பிரான்ஸ்] ஆகியோரின் நேசத் தந்தையும், காலஞ்சென்ற அருட்சகோதரி சென். ஜெறோம் (தி. கு. சபை) அவர்களின் சகோதரரும், அருட்தந்தை B. சமரக்கோன் [O. M. I.] அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் வத்தளை புனித அன்னம்மாள் ஆலய சேமக்காலையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறும், அன்னாரின் ஆன்மா நித்திய பேரின்ப மகிழ்வுபெறச் செபிக்குமாறும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

தகவல்:

திருமதி ராணி மனுவேற்பிள்ளை

[சகோதரி]

தவசிகுளம்,
மிருசுவில். [8640]

## திருமதி இராசம்மா கந்தையா

(தாவடிச்சந்தி)

தாவடிச் சந்தியைச் சேர்ந்த திருமதி இராசம்மா கந்தையா அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் அமரர், பிரபலவர்த்தகர், V.T. கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மலிங்கம், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் கந்தையா ஆகியோரின் சகோதரியும், மகேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி, தனலட்சுமி (லண்டன்), மகாலட்சுமி, செஜலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை (தபால் அஞ்சல் அதிபர்) மற்றும் அன்னலிங்கம் [பிறப்பு இறப்பு பதிவாளர் தாவடி], புஸ்பராஜா [லண்டன்], நடராஜா [பாற்சபை, ருவன்வெல] அருணகிரிநாதன் [சட்டத்தரணி] ஆகியோரின் அன்பு மாமியாரும், அருளானந்தன் [அவுஸ்திரேலியா] காயத்திரிதேவி [கனடா] சிவநாதன் [ஜேர்மனி], இந்திராதேவி, பத்மநாதன் [கனடா] சபாநாதன் [ஹொலண்ட்] பத்மினி [கனடா] செந்தில் குமரேசன், சாந்தினி [லண்டன்], கௌரி, உதயகுமர் (லண்டன்), ரமேஷ்குமார் [லண்டன்], யாமினி [லண்டன்], நிமலினி [லண்டன்], முகுந்தன் [கொழும்பு], குமுதினி, சுகந்தன், திலீபன், நிலீப்குமார், திலீப்காந்தன், அச்சுதன், அனந்தன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நீருஜா [அவுஸ்திரேலியா] ஷறீகா [ஜேர்மனி] உபாஷனா [கனடா], சுகன்யா [கனடா] அர்ச்சுன் [கனடா], அனுதிரிகா, கஸ்தூரிகா, ஜெனித் [கனடா], டிலக்ஷன், டிலானி [லண்டன்], டிலக்ஷி [லண்டன்] ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-08-95) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செ. அன்னலிங்கம்

[மருமகன்]

(38067)

## சதாசிவம்பிள்ளை செகராசசுப்பிரமணியம்

(சோதிடர்)

வடமராட்சி நவிண்டிலைச் சேர்ந்த சோதிடர் சதாசிவம்பிள்ளை செகராசசுப்பிரமணியம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வள்ளியம்மையின் கணவரும், ஓய்வுபெற்ற அஞ்சலதிபர் சிவப்பிரகாசம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரோஜினிதேவி சுந்தரலிங்கம், நல்லூர் அரச சிறுவர் இல்ல முதற்படி ஆசிரியை திருமதி லோகதாதேவி சிவசம்பு ஆகியோரின் தந்தையாரும், திருமதி இரத்தினாம்பிகை, காலஞ்சென்ற ஆசிரியர் சுந்தரலிங்கம், யாழ். கல்வித்திணைக்கள வலயம் இரண்டைச் சேர்ந்த சிவசம்பு ஆகியோரின் மாமனாரும், கோமதி, ஹரன், சுமந்திரன், நிரஞ்சனன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [17-08-95] காலை 9-00 மணிக்கு நடைபெறும். தயவுசெய்து இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செ. சிவப்பிரகாசம்

[மகன்]

நவிண்டில்,
கரணவாய் மத்தி. [38070]

## கல்லுண்டாய் வீதியில் இன்று செல்ல முடியாது

யாழ்ப்பாணம் — பொன்னாலை வீதியில் [கல்லுண்டாய்ப் பாலத்தில்] உள்ள அராலிப் பாலத்தில் திருத்த வேலைகள் நடைபெறுவதால் இன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை அப்பாதை ஊடாக — சைக்கிள் உட்பட சகல போக்குவரத்துக்களும் தடை செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [உ]

# வடக்கு - கிழக்கு புலிகளின் கையில்

## கூப்பாடு போடாதீர் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 17

வடக்கு— கிழக்கு நிர்வாகம் விடுதலைப் புலிகளின் கையில் இருக்கிறது. இது தெரியாமல் சிலர் கூப்பாடு போடுகிறார்கள். இப்படி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கையில் உள்ள வடக்கு— கிழக்கு அதிகாரத்தை மீட்பதுதான் எமது அதிகாரப்பரவலாக்கல் திட்ட யோசனைகளின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். [இ-ஜ]

# வேவுப் புலிகளின் அர்ப்பணிப்புகளை விளக்கும் 'உறங்காத கண்மணிகள்'

யாழ்ப்பாணம், ஓக. 17

தமிழீழப் போராட்டத்திலே கரும்புலிகள் போன்று வேவுப் புலிகளின் பணியும், அர்ப்பணிப்புகளும் மகத்தானவை—

இதனை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட முழு நீளத் திரைப்படம் தான் போராளி சி. சேரனின் நெறிப்படுத்தலில் உருவான ''உறங்காத கண்மணிகள்''.

இதன் வெளியீட்டு வைபவம் யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரை அரங்கில் மட்டு — அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் ஈஸ்வரநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் ரதி ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றினர்.

மட்டு.]அம்பாறை மாவட்ட ஜெயந்தன் படைப்பிரிவுத் தளபதி ரெஜி 'உறங்காத கண்மணிகள்' வீடியோ படநாடாவை வெளியிட்டு வைத்தார்.

திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி பதுமன் அதனைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலியைத் தொடர்ந்து நிதர்சனம் நடுவகப் பணியகப்பொறுப்பாளர் நகுலன் வரவேற்புரையையும் —

நிதர்சனப் பொறுப்பாளர் தமிழன்பன் வெளியீட்டுரையையும் — நிகழ்த்தினர்.

சிறப்புப் பிரதியை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வர்த்தகர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.

மதிப்பீட்டுரையை திரு. சசி நிகழ்த்தினார்.

'உறங்காத கண்மணிகள்' படத்தில் நடித்த கலைஞர்கள் அனைவரும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனால் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இப்படத்தை உருவாக்கிய திரு. சி. சேரன் பதிலுரை நிகழ்த்தினார்.

இறுதியாக திரு. தியாகராஜாவின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

## இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். போதனா மருத்துவமனை குருதி வைப்பகத்திற்கு 'பி' நெகடிவ் குருதியும், 'ஓ' பொசிட்டிவ் குருதியும் அவசரமாக தேவைப்படுகிறது. சேவை உள்ளம் கொண்டோர் யாழ் போதனா மருத்துவமனை நோயாளர்நலன் புரி சங்கத்துடன் தொடர்பு கொண்டு குருதிக்கொடையளித்து உதவுமாறு கேட்கப்பட்டு உள்ளது (ஒ)

## விடைத்தாள்கள் கப்பலில் அனுப்ப ஏற்பாடு

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையின் விடைத்தாள்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி கப்பல் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [ஒ-3]

## 'லங்கா முடித'....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செல்கின்றது என்பதை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ள இக்கப்பல் அனேகமாக திருகோணமலை சென்று தரித்து நிற்கும் என்றும் —

வடக்கே கப்பல்கள் செல்ல அனுமதி கிடைத்ததும் அது பருத்தித்துறைக்கு புறப்படும் என்றும் — மற்றொரு செய்தி தெரிவித்தது. (ஒ-3)

## வை.கோ. உட்பட 25 ஆயிரம் தொண்டர் கைது

மத்திய மாநில அரசுகளின் மக்களுக்கு எதிராக கொண்டுள்ள கொள்கைகளை கண்டித்து — மறுமலர்ச்சி திமுக நேற்று சென்னையில் மறியல் போராட்டம் மேற்கொண்ட சமயம் அதன் செயலாளர் வை.கோபாலசாமியும் 25 ஆயிரம் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர் அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டானர் இடது கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் என். சங்கரய்யாவும் கைதானார். (ஒ-3)

## டாங்கிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இரு பெரிய டாங்கிகளை ஏற்றிச் சென்ற இழுவை வாகனம் டிரெயிலர் வீதியில் பழுதடைந்து நின்றுவிட்டதாகவும் —

உடனடியாக அந்த வீதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது என்றும் இராணுவத்தினர் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் — தெரியவந்தது. (ஒ-3)

## கப்பல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடைப்பிடிப்பதாக அறியவருகிறது.

வடக்கே செல்லும் கப்பல்களில், அங்கே உள்ள படையினருக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் எடுத்துச்சென்று காங்கேசனில் இறக்க வேண்டும் என்பதில் பாதுகாப்பு அமைச்சு விடாப்பிடியாக உள்ளதாகவும்—

கொழும்பிலிருந்து வரும் கப்பல்களைக் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு ஐந்து மைல் தொலைவில் வைத்துச் சோதனை செய்வதற்கு அது ஆதரவாக இல்லை என்றும்— கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை —

செஞ்சிலுவைப் பாதுகாப்புடன் கப்பல்களை வடக்கே அனுப்ப முடியாது போனால் உணவுப் பொருள்களை அரச பாதுகாப்புடன் அனுப்புவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எம். ஜே. எஸ். ஜுனைட் கொழும்பில் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த முடிவின் பிரகாரமே ''லங்கா முடித'' நேற்று கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டதாக அறியவருகிறது. (ஆ-3--6)

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை கந்தையா

[சுப்பிரமணியம்]

[இளைப்பாறிய அதிபர், மான் ஆங்கில பாடசாலை, உடுவில்]

உடுவில் மல்வத்தைச் சேர்ந்த சி. கந்தையா 16-8-95 இல் காலமானார்.

இவர் இரத்தினத்தின் அன்புக் கணவரும், இரபேந்திரன் (Robin), சிவயோகநாதன் (U. K), கேதீஸ்வரநாதன் (Kankesan Cement Corp), கோமளகாந்தி, தர்மபூபதி, விஜயலட்சுமி, நாகலட்சுமி, பிரபாகரன், கிரிதரன் (France) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சி, செல்வராணி, ராஜேஸ்வரி, செல்வேந்திரகுமார் [Sailor], செல்வத்துரை [அரசாங்க ஒப்பந்தக்காரர்], குலசிங்கம் (Germany), சத்திருபன் [U.K.] கல்யாணி (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருஷா, நிலூக்கா, வினோத், ஜெனாத், கஜாத், கீர்த்தன், சாந்தி, பௌத்ரா, தேவகரன், தேவதர்சிகா அர்ச்சனா, ஜனனி, சுபகௌரி, சுபதர்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை [17- 8- 95] 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கேதீஸ்வரநாதன்

[மகன்]

'' இரத்தின வாசா ''
மல்வம், உடுவில் [38066]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.